சார்பு நீதிமன்றம், பெருந்துறை
MCOP No: 45/2022

2026-ம் ஆண்டு ஜனவரி மாதம் 22ம் நாள் Pw1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | முத்துசாமி |
| த.க.பெயர் | செம்மலை கவுண்டர் |
| கிராமம் | சீலாங்காட்டு வலசு |
| மாவட்டம் | |
| வயது | 78 |

ம.சா. 1 நாள் 22.01.2026

முதல் விசாரணை: (சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை செய்யப்படுகிறார்)

ம.சா.1 ஆகிய நான் இம்மனுவின் மனுதாரர். என் தரப்பு முதல் விசாரணைக்காக நிருபண ஆணையுறுதி வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நிருபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் தெரியும்.

| | | |
|---|---|---|
| 1. | முதல் தகவல் அறிக்கை | ம.சா.ஆ.1 |
| 2. | மாதிரி வரைபடம் | ம.சா.ஆ.2 |
| 3. | பார்வை மகசர் | ம.சா.ஆ.3 |
| 4. | மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை (டிவிஎஸ் இருசக்கர வாகனம்) | ம.சா.ஆ.4 |
| 5. | மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை (Honda இருசக்கர வாகனம்) | ம.சா.ஆ.5 |
| 6. | காயச்சான்றிதழ் | ம.சா.ஆ.6 |
| 7. | குற்ற இறுதியறிக்கை | ம.சா.ஆ.7 |
| 8. | குற்றவியல் நீதிமன்றத்தில் ஏற்பட்ட முடிவு | ம.சா.ஆ.8 |
| 9. | மனுதாரரின் ஆதார் அட்டை | ம.சா.ஆ.9 |
| 10. | மருத்துவ விடுவிப்பு சான்று | ம.சா.ஆ.10 |
| 11 | மருத்துவமனை கட்டண ரசீதுகள் ரூ.2,45,345/- (ஆட்சேபணையுடன்) | ம.சா.ஆ.11 |

| | | |
|---|---|---|
| 12 | ஊனச் சான்று | ம.சா.ஆ.12 |

மனுவில் கோரியுள்ள பரிகாரம் வழங்கக் கோருகிறேன்.

குறுக்கு விசாரணை (3 ம் எதிர்மனுதாரர் தரப்பில்)

எனக்கு இரு சக்கர வாகனம் ஓட்ட உரிமம் இல்லை என்றால சரி. எனது இரு சக்கர வாகனத்திற்கு முறையான காப்பீட்டு சான்று அமலில் இல்லை என்றால சரிதான். சாலை விதிகளை பின்பற்றாமல் நான் சாலையை கடந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றும் விபத்திற்கு எனது கவனக்குறைவும் அஜாக்கிரதையும் தான் காரணம் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் 1 ம் எதிர்மனுதாரருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும் அதனால் 3 ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனம் நஷ்டஈடு வழங்க பொறுப்பல்ல என்றும் வாகனத்தின் உரிமையாளர் 2 ம் எதிர்மனுதாரர் தான் எனக்கு நஷ்டஈடு செலுத்தவேண்டும் என்றால சரியல்ல. எனக்கு வழங்கப்பட்ட ஊனத்தின் சதவீதம் எனது வயோதிகத்தையும் அசௌகரியத்தையும் கணக்கிட்டு வழங்கப்பட்டுள்ளது என்றும் எனக்கு மருத்துவ ரீதியான ஊனச் சான்று முறையான நடைமுறைகளை பின்பற்றி வழங்கப்படவில்லை என்றும் அது மிகைப்படுத்தப்பட்டு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனக்கு விபத்தினால் நிரந்தர ஊனமோ வருமான இழப்போ இல்லை என்றும் நான் எனது மகனின் பாதுகாப்பில் தான் உள்ளேன் என்றால் சரியல்ல. நான் மாதம் ரூ.30000/- வருமானம் ஈட்டியதாக வழக்கிற்காக பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. மருத்துவமனை கட்டண ரசீதுகள் வழக்கிற்காக தயார் செய்து மிகைப்படுத்தி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்றால் சரியல்ல. 3 ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED

Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2026.01.22 17:32:13 -1000

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS